NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2009

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 10 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in TAMIL.

---

IEB Copyright © 2009 

## SECTION A

கீழ்க்காணும் கதையைக் கவனமாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும்.

**Read the following passage carefully and answer the questions set on it.**

### கை கொடுப்போம்

ஒரு சனிக்கிழமை நான் என் வீட்டிற்கு அருகில் உள்ள சமூக மன்றத்திற்குச் சென்றேன். அங்குப் பொதுமக்களுக்கான குடிமைத் தற்காப்புப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது குடிமைத் தற்காப்புப் படையின் ‘கேப்டன்’ தினகரன் பேசினார். பேரிடர் ஏற்படும் அவசரக் காலத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பொதுமக்களுக்கு உதவி செய்வதே தங்களின் முக்கியப் பணி என்று அவர் கூறினார். அதன்பின்பு அப்படையின் அதிகாரி ராஜ், பேரிடரில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்வது எப்படி என்பதைப்பற்றி விளக்கினார். கை, கால் முறிந்தவர்களுக்குக் கட்டுப்போடுவது,



காயங்களுக்கு மருந்து போடுவது போன்ற பல முதலுதவிச் சிகிச்சைகளைப்பற்றி நாங்கள் தெரிந்து கொண்டோம். அவசரக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பல பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய படக்காட்சி ஒன்றும் காட்டப்பட்டது.

அவசரக் காலத்தில் உணவும் தண்ணீரும் மக்களுக்கு எப்படிப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றன என்பதுபற்றி 'சார்ஜன்' ஜேம்ஸ் விளக்கமளித்தார். அவசரக் காலத்தின்போது ஒலிக்கும் சங்கொலியைப் பற்றியும் எங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பயிற்சியின் இறுதிக் கட்டமாகப் பல வேடிக்கை விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. அந்த விளையாட்டுகளில் நானும் ஆர்வத்துடன் பங்கேற்றேன். போர்க் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பல விதிமுறைகளையும் அந்த விளையாட்டுகளின் மூலம் நான் அறிந்து கொண்டேன். குடிமைத் தற்காப்புப் படை வீரர்கள் பல வீரச்செயல்களைச் செய்து எங்களை வியப்பில் ஆழ்த்தினர். பயிற்சியில் கலந்துகொண்டவர்கள் தற்காப்புப் படையினரின் சேவையைப்பற்றிப் பெருமையாகப் பேசினர்.

1.1 ***கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.***

**Fill in the missing words taken from the passage.**

ஒரு சனிக்கிழமை நான் என் 1.1.1 அருகில் உள்ள சமூக மன்றத்திற்குச் சென்றேன். அங்குப் பொதுமக்களுக்கான குடிமைத் தற்காப்புப் 1.1.2 நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது குடிமைத் தற்காப்புப் படையின் 'கேப்டன்' தினகரன் 1.1.3 பேரிடர் ஏற்படும் அவசரக் காலத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பொதுமக்களுக்கு 1.1.4 செய்வதே தங்களின் முக்கியப் பணி என்று அவர் கூறினார்.

1.1.1

1.1.2

1.1.3

1.1.4

**[4]**

1.2 பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் 3 விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் சரியான விடை தேர்ந்தெடுத்து எழுதுக.

**Choose the correct answer from the 3 possible answers given and write it next to each number.**

1.2.1 எழுத்தாளர் ஒரு சனிக்கிழமை எங்கே சென்றார்?

a) திரு மணதிற்கு

b) சமூக மன்றத்திற்கு

c) கோவிலுக்கு (2)

1.2.2 "கேப்டன்" தினகரன் எதைப்பற்றி பேசினார்?

a) தினமும் திருடரை எதிர்பார்க்க வேண்டும்.

b) பொதுமக்களுக்கு உதவி செய்யவேண்டும்.

c) எப்பொழுதும் கதையைப் படிக்கவேண்டும். (2)

1.2.3 கை, கால் முறிந்தவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்?

a) கட்டுப்போடவேண்டும்

b) மருந்து கொடுக்க வேண்டும்

c) விட்டுக்கு அனுப்பவேண்டும் (2)

1.2.4 பயிற்சியின் இறுதிக் கட்டமாக எது நடத்துப்பட்டன?

a) பந்தாட்டு மட்டும்

b) வாய்மொழி பயற்சி

c) பல வேடிக்கை விளையாட்டுகள் (2)

IEB Copyright © 2009

1.2.5 யார் பல வீரச்செயல்களைச் செய்து அவர்களுடைய வியப்பில் ஆழ்த்தினர்?

a) கடிமைத் தற்காப்புப் படை வீரர்கள்

b) சார்ஜன் ஜேம்ஸ்

c) அதிகாரி ராஜ் (2)

**[10]**

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று எழுதுக.

**State whether the following statements are True or False.**

1.3.1 சமூக மன்றம் வீட்டிற்கு அருகில் உள்ளன (2)

1.3.2 கேப்டன் தினகரன் முதலுதவியைப் பற்றி பேசினார் (2)

1.3.3 பல பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய படக்காட்சி ஒன்றும் கிட்டப்பட்டது (2)

1.3.4 அவசரக் காலத்தைப் பற்றி சார்ஜன் ஜேம்ஸ் ஒன்றுமே பேசவில்லை (2)

1.3.5 பயிற்சியில் கலந்துக்கொண்டவரகள் தற்காப்புப் படையினரின் சேவையைப் பற்றிப் பெருமையாகப் பேசினர் (2)

**[10]**

IEB Copyright © 2009

1.4 பின்வரும் சொற்களுக்கு அதே பொருளுள்ள சொல்லைக் கண்டுப்பிடித்து எழுதுக.

**Choose a word from those given which has more or less the same meaning as the given word.**

1.4.1 கிட்டத்தட்ட:
1.முடிவில்
2.அருகில்
3.இடையில் (2)

1.4.2 பயிற்சி:
1.வழக்கில்
2.பரீட்சை
3.எழுத்து (2)

1.4.3 பேசினார்
1.சென்றார்
2.வருந்தினார்
3.கூறினார் (2)

1.4.4 அதன்பின்பு
1.பிறகு
2.நேற்று
3.நாளை (2)

1.4.5 ஏற்பாடுகள்
1.நடவடிக்கைகள்
2.கண்டுப்பிடித்து
3.பாடிவிட்டு (2)
**[10]**

1.5 சரியாக எழுதுக:

**Write correctly – refer to the passage.**

1.5.1 என் உள்ள வீட்டிற்கு அருகில் சென்றேன் சமூக மன்றத்திற்குச் (2)

1.5.2 அப்போது பேசினார் தினகரன் "கேப்டன்" (2)

1.5.3 அவசரக்காலத்திற்கு நடவடிக்கைகள் தயாரிக்க வேண்டும் பல (2)
**[6]**

IEB Copyright © 2009

1.6 எதிர்ச்சொல் தருக:

**Choose a word opposite in meaning to the given word.**

1.6.1 பல [சில, ஒன்று] (2)

1.6.2 ஆவலுடன் [அழகுடன், ஆர்வத்துடன்] (2)

1.6.3 ஏற்பாடுகள் [நடவடிக்கைகள், வீரச்செயல்கள்] (2)
**[6]**

1.7 சரியாக எழுதுக:
**Correct the spelling of these words.**

1.7.1 சணிக்கழமை (1)

1.7.2 பயைற்சி (1)

1.7.3 முதல்லுதுவி (1)

1.7.4 விலக்கிணார் (1)

1.7.5 மறுந்தூ (1)

1.7.6 அவசறகாளத்தில் (1)

1.7.7 தன்னீரும் (1)

1.7.8 வீறர்கல் (1)
**[8]**

1.8 பிரித்து எழுதுக:

**Write separate words.**

1.8.1 இந்தமன்றம் (1)

1.8.2 அந்தக்கேப்டன் (1)

1.8.3 இதைச்செய் (1)

1.8.4 பெரியப்போர் (1)

1.8.5 அவசரக்காலம் (1)
**[5]**

1.9 சேர்த்து எழுதுக:

**Write as one word.**

1.9.1 போர் + காலம் (1)

1.9.2 தற்காப்பு + படை (1)
**[2]**

1.10 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக:

**Write the feminine gender.**

1.10.1 தலைவன் (1)

1.10.2 நண்பன் (1)

1.10.3 ஆண்கள் (1)

1.10.4 மகன் (1)
**[4]**

1.11 ஒருமைக்குப் பன்மை எழுதுக:

**Write the plural forms of the following nouns.**

1.11.1 நான் (1)

1.11.2 படை (1)

1.11.3 கை (1)

1.11.4 காலம் (1)

1.11.5 வீரர் (1)
**[5]**

**70 marks**

## SECTION B பகுதி ஆ

1. கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்

1.1 கீழ்வரும் கதையை 10-12 வரிகளில் முடிவு செய்க.

**Complete the story below in 10 – 12 lines.**

இரு நண்பர்கள்

ஒரு காலத்தில் இரு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர்................ (8)

1.2 பொருத்தி எழுதுக :

**Match the following expressions.**

| | | | |
|---|---|---|---|
| 1.2.1 | அன்னையும் பிதாவும் | : | மூவா மருந்து |
| 1.2.2 | ஆலயந் தொழுவது | : | முன்னறி தெய்வம் |
| 1.2.3 | உண்டி சுருங்குதல் | : | சாலவும் நன்று |
| 1.2.4 | ஏவா மக்கள் | : | பெண்டிற் கழகு |

(4)
**[12]**

2. திருக்குறள் :
முடிவு செய்க.

**Complete the following Kurals:**

2.1 அகர முதல.................... (2)

2.2 கற்றதனா லாய.................. (2)

2.3 மலர்மிசை ஏகினான்.................... (2)

2.4 தீயினாற் சுட்டபுண்........................ (2)
**[8]**

IEB Copyright © 2009 

3. குயில் பாட்டு

கீழ் வரும் வரிகளைப் படித்து சரியான விடை தருக.

**Study the lines below and answer the questions that follow:**



மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே
நீலக் குயிலிருந்து நீண்டகதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கிழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,
கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன்; நெஞ்சிலனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன், மெய்
வெயர்த்தேன்.

3.1 குயில் பாட்டை எழுதியவர் யார்? (1)

3.2 இந்தப் பாட்டை ஏன் குயில் பாட்டு என்று அழைக்கின்றோம்? (1)

3.3 மேற் கண்ட வரிகளில் எந்த விலங்கைப் பற்றி எழுதியுள்ளது ? (1)

3.4 மாடன் யார்? (1)

3.5 எந்த பறவையைப் பற்றி எழுதியுள்ளது ? (1)

3.6 மறுபிறப்பில் குரங்கன் எவ்வாறு பிறந்தான் ? (1)

3.7 இளவரசனைப் பற்றி 4-5 வரிகள் எழுதுக. (4)

**[10]**

**30 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2009